தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆறாவது சட்டமன்றப் பேரவையின் ஆறாவது கூட்டத் தொடர்.

வெள்ளிக்கிழமை, 1979 அக்டோபர் 26.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு: ஓர் உறையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(1) இரங்கற் குறிப்புகள்

திரு. பி. எஸ். மூர்த்தி, திரு. ஈரோடு மு. சின்னசாமி, திரு. வி. பி. குன்னிராம குருப், திரு. சிவகங்கை சி. சேதுராமன், திரு. ஓ. என். சுந்தரம், திரு. ஆர். கோவிந்தராஜுலு, ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. பி. எஸ். மூர்த்தி அவர்கள் 22–5–1979 ஆம் தேதியன்றும், திரு. ஈரோடு மு. சின்னசாமி அவர்கள் 1–8–1979 ஆம் தேதியன்றும், திரு. வி. பி. குன்னிராம குருப் அவர்கள் 14–8–1979 ஆம் தேதியன்றும், திரு. சிவகங்கை சி. சேதுராமன் அவர்கள் 8–9–1979 ஆம் தேதியன்றும், திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் 27–9–1979 ஆம் தேதியன்றும், திரு. ஆர். கோவிந்தராஜுலு அவர்கள் 16–10–1979 ஆம் தேதியன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எஸ். மூர்த்தி அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டுவரையிலும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையிலும் காக்கிநாடா (பொது கிராமப்புற செட்யூல்டு) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்ட மன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பெற்றார். இரு முறையும் பாராளுமன்றச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். 1946-47-ஆம் ஆண்டு அரசு தலைமைக் கொறடாவாகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. ஈரோடு மு. சின்னசாமி அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை ஈரோடு தொகுதியிலிருந்தும், 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை மொடக்குறிச்சித் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

திரு. வி. பி. குன்னிராம குரூப் அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரை குயிலாண்டி தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சட்டமன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

திரு. சிவகங்கை சி. சேதுராமன் அவர்கள் 1967-ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையிலும் சிவகங்கைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்றார்.

திரு. ஆர். கோவிந்தராஜுலு அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரை மாதவரம் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1952-53 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையிலும் 1956-57 மற்றும் 1957-62 வரை மக்களவையிலும் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்கள் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்.

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், டாக்டர் பி. வி. இராஜமன்னார், திரு. மவுண்ட் பேட்டன் பிரபு, திரு. பி.கே. மூக்கையாத் தேவர், திரு. தே. ஞானசிகாமணி, திரு. என். சுப்பராயன்—ஆகியோர் மறைவு குறித்து.